# தி. மு. கழக அலுவலகத்தில் சோதனை!

REGD. No. M. 6311 PHONE No. 55630

# நம் நாடு

தி. மு. க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu": A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F

தனி இதழ்: ஒரு அணா | சென்னை: ஆவணி 1உ செவ்வாய் (17—8—54) | மலர்: 2
இலங்கையில் 10 சதம் | வெளியூர்: ஆவணி 2உ புதன் (18—8—54) | இதழ்: 55

## திரு—கொச்சி போலீசார் நடவடிக்கை!

## திரு—த.நா.கா., கம்யூனிஸ்டு அலுவலகங்களும் சோதனையிடப்பட்டன!

### மருத்துவ மனையில் குஞ்சன் நாடார்!

## வில்லியம் எம்.எல்.ஏ. கைது!

நாகர்கோவில், ஆக. 16—

திரு—கொச்சி போலீசார், நாகர்கோவிலில் திராவிட முன்னேற்றக் கழகம், திருவாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ், கம்யூனிஸ்டு கட்சி ஆகியவற்றின் அலுவலகங்களைச் சோதனையிட்டனர் என்று தெரிகிறது.

ஆகஸ்டு 11-ந் தேதியன்று நடைபெற்ற 'விடுதலை தின' நிகழ்ச்சிகளை ஒட்டி கைது செய்யப்பட்ட திரு—தமிழர் அறப்போர் சர்வாதிகாரியான தோழர் குஞ்சன் நாடார் எம். எல். ஏ. மருத்துவ மனைக்குக் கொண்டு செல்லப்பட்டிருக்கிறார் என்று தெரிகிறது.

மற்றொரு சட்டசபை உறுப்பினரான தோழர் தாணுலிங்க நாடார் குழித்துறையில் சிறை வைக்கப்பட்டிருக்கிறார் என்று தெரிகிறது.

திரு—தமிழர் தலைவர்களில் ஒருவரான தோழர் ராமசாமி பிள்ளை வில்லவன்கோடு தாலுக்காவில் நிலைமைகளை நேரில் அறியும் பொருட்டு அங்கே சென்றுள்ளார்.

இதற்கிடையில் திரு—கொச்சி சட்டசபை உறுப்பினரும், திரு—த. நா. கா. கமிட்டி உறுப்பினருமான தோழர் வில்லியம், ஆகஸ்டு 11-ந் தேதி 'விடுதலை தின'த்தை ஒட்டிய நிகழ்ச்சிகளுக்காக திரு—கொச்சி போலீசாரால் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

★

திரு-தமிழர் அறப்போரில் ஆக. 6-ந் தேதியன்று அடையாள மறியல் செய்து 110 தி. மு. கழகத் தோழர்கள் கைதாயினர் என்பதும், அடையாள மறியலில் கழகத் தோழர்கள் கண்ணியம், கட்டுப்பாடு ஆகிய பண்புகளுடன் பணியாற்றினார்கள் என்பதும் நினைவிருக்கலாம்.

அடையாள மறியல் நடைபெற்ற பின்னர் திரு—தமிழர் தலைவர் நேசமணி விடுதலையடைந்ததும் அவருடன் கலந்து பேசி திட்டமிடப்பட்டபின் திரு-தமிழர் அறப்போரில் தி. மு. கழகத்தின் அடுத்த கட்டம் ஆரம்பமாகுமென்று தி. மு. கழக பொதுச் செயலாளர் அண்ணாதுரை அறிவித்திருக்கிறார். அதன்படியே ஆக. 6-ந் தேதியன்று நடைபெற்ற அடையாள மறியலில் மட்டுமே தி. மு. கழகத்தினர் கலந்து கொண்டனர்.

திரு—தமிழர் பகுதிகளில் 6-ந் தேதிக்குப் பின்னர் நடைபெற்ற எந்த நிகழ்ச்சிகளிலும் தி. மு. கழகம் பங்குகொள்ளவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

# போர்ச்சுகீசிய சர்க்கார் போர்க்கோலம்

## போர்க் கப்பலிலிருந்து பீரங்கிப் பிரயோகம்!

### மேலும் 3 கிராமங்கள் விடுதலை!

கோவாவில் உள்ள சிறு துறைமுகமான தேரோகோலை அறப்போர் வீரர்களிடமிருந்து மீண்டும் கைப்பற்ற போர்ச்சுகீசிய கப்பல், பீரங்கியினால் சுட்டது. காலை 8-30 மணிக்கு பீரங்கிக் குண்டுகளின் புகை சூழ்ந்து காணப்பட்ட தேரோகோல் கோட்டையில் 125 போர்த்துகீசியத் துருப்புகள் நுழைந்து, அறப்போர் வீரர்களால் ஏற்றிவைக்கப்பட்டிருந்த இந்தியக் கொடியை இறக்கி, போர்ச்சுகீசியக் கொடியை ஏற்றினர் என்று தெரிகிறது.

தேரோகோல் கோட்டையைப் பிடித்துக்காத்துவந்த 15 அறப்போர் வீரர்களையும் கைது செய்து போர்ச்சுக்கல் கப்பலுக்குக் கொண்டு சென்றனர் என்று தெரிகிறது.

பெல்காம் எல்லையில் சங்கம் தாலுகாவிலுள்ள டோல்டெம், தர்கெம், தமாரி ஆகிய மூன்று கிராமங்களையும் கோவா தேசியவாதிகள் விடுவித்தனர்.

தங்களை அன்னியர் பிடியிலிருந்து விடுவித்த 25 கோவானியர்களையும் கிராம மக்கள் குதூகலமாக வரவேற்றார்கள் என்று தெரிகிறது.

## தெ. கிழக்கு ஆசிய பாதுகாப்பு

### ஆதிபத்தியங்கள் அமைக்கும் இராணுவ அணிவகுப்பு!

லண்டன், ஆக. 16—

தென் கிழக்காசிய நாடுகளின் பாதுகாப்பிற்காக 'சீட்டோ' என்ற பெயரில் ஒரு இராணுவ ஸ்தாபனம் அமைக்க, அமெரிக்காவின் பெரு முயற்சியில் வருகிற செப்டம்பர் 6-ந் தேதியன்று பிலிப்பைனில் நடைபெறவிருக்கும் மாநாட்டில் கலந்துகொள்ள எட்டு நாடுகள் சம்மதித்துள்ளனவாம்.

பிரான்ஸ்; பிரிட்டன், அமெரிக்கா, நியூசிலாந்து, ஆஸ்திரேலியா, தாய்லாந்து, பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளின் வெளிவிவகார இலாகா மந்திரிகள் மேற்கண்ட மாநாட்டில் கலந்துகொண்டு பேச்சு வார்த்தைகள் நடத்த சம்மதித்துள்ளனர் எனத் தெரிகிறது.

## "ஒப்பந்தம் எதிலும் சேர மாட்டோம்!"

### பாரசீக அமைச்சர் அறிவிப்பு

டெஹ்ரான், ஆக. 16—

"எந்தவிதமான பாதுகாப்பு ஒப்பந்தத்திலும் பாரசீகம் சேராது," என்று பாரசீக வெளிநாட்டு அமைச்சர் அப்துல்லா. என்டிசம் கூறியுள்ளார்.

"துருக்கி அல்லது பாகிஸ்தான் போன்ற எந்த நாட்டாவது ஒப்பந்தமெதிலும் சேருமாறு அழைத்ததா?" என்ற கேள்விக்குப் பதிலளிக்கையில், யாரும் தங்களுக்கு அவ்வித அழைப்பு எதையும் அனுப்பவில்லையென்றும் எந்த ஒப்பந்தத்திலும் சேரும் நோக்கம் பாரசீகத்திற்குக் கிடையாது என்றும் கூறினர்.

## பிரதம நீதிபதி 'டிஸ்மிஸ்!'

### சோவியத் நாட்டில் நிகழ்ச்சி!

சோவியத் ஆர்மீனிய உயர் நீதி மன்ற பிரதம நீதிபதி எ. அரோயன் என்பவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டதாக ஆர்மீனிய கம்யூனிஸ்டு கட்சி இதழ் ஒன்று குறிப்பிட்டுள்ளது.

பதவி நீக்கத்திற்கான காரணம் எதையும் காட்டாது, நீக்கப்பட்டவர் இடத்தில் அலெக்சன்யென் என்பார் நீதிபதியாக நியமிக்கப்பட்டிருக்கிறார் என்று மட்டும் அந்த பத்திரிகைக் குறிப்பு கூறுகிறது.

புதிய நியமனம் பெற்றுள்ள அலெக்சன்யென் என்பவரும் ஆர்மீனிய உயர்நீதி மன்றத்தில் நீதிபதியாக இருந்தவர் தான்!

## பொதுவுடைமையரின் 'நேரடி நடவடிக்கை!'

### ஆந்திராவில் 145 பேர் கைதாயினர்!

கர்னூல், ஆக. 16—

ஆந்திர சர்க்காருக்கு எதிராக 'நேரடி நடவடிக்கை'யில் ஈடுபட்டதாக 145 கம்யூனிஸ்டுகள் கைது செய்யப்பட்டனர் என்று தெரிகிறது.

மதுவிலக்கு எதிர்ப்பு நடவடிக்கையாக கம்யூனிஸ்டுகளால் ஏற்பாடு செய்யப்பட்டு நேரடி நடவடிக்கையில் இறங்கியவர்கள் மரங்களில் கள் இறக்கினார்கள் என்று தெரிகிறது.

தனுக்கு தாலுகாவில் நான்கு கிராமங்களிலும், கிருஷ்ணா, ஸ்ரீகாகுளம், விசாகபட்டினம் மாவட்டங்களின் சில பகுதிகளிலும் இந்த நேரடி நடவடிக்கை நடைபெற்றிருக்கிறது.

# டில்லி சர்க்கார் வழங்கும் 'பட்டங்கள்'

## அரசியல் சட்டத்திற்கு உடன்பாடானவையா?

### பேராசிரியர் குஞ்சன் ராஜா கேள்வி!

"இந்திய அரசியல் சட்டத்தின் 18 (1)-வது பிரிவு 'இராணுவம், கல்வித்துறையில் பாண்டித்தியம் இவைகளின் மேன்மைக்காக அன்றி, வேறெந்தவிதமான பட்டங்களையும் சர்க்கார் வழங்கக் கூடாது,' என்று குறிப்பிடுகிறது.

"பிரிட்டிஷ் அரசாங்கத்தால் வழங்கப்பட்ட பட்டங்கள் அநேகரால் துறக்கப்பட்டன; அத்தகு பட்டங்களையும் அரசாங்கம் அதிகாரபூர்வமாக அங்கீகரிக்கவில்லை.

"என்றாலும் இப்போது, 'பாரத ரத்னு,' 'பத்ம விபூஷன்' ஆகிய பட்டங்கள் சர்க்காரால் வழங்கப்படுகின்றன. பலதரப்பட்ட இந்தப் பட்டங்களைப் பெற்றுள்ளவர்களின் பட்டியல் சுதந்திரதினத்தன்று வெளியாகியுள்ளது; அதுகூட, மிகவும் நீளமானதாயிருக்கிறது!

"இந்தப் பட்டங்கள் அரசியல் சட்டத்திற்குப் பொருத்தமானவை தான் என்று நாம் எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்? அவைகள், 'பட்டங்கள்' என்பதே இல்லையா? அல்லது, அவைகள் எல்லாம், நடைமுறையில் எவ்வித முக்கியத்துவமும் இல்லாத, கல்வித்துறை சம்பந்தப் பட்டமே என்று பொருள்படுகின்றதா?"

இவ்வாறு திரு. சி. குஞ்சன் ராஜா என்ற பேராசிரியர் 17—8—54ந் தேதிய 'இந்து' இதழில் எழுதியுள்ள கடிதத்தில் கேட்டிருக்கிறார்.

புதுதில்லி, ஆக. 16—

இங்குள்ள 4 கோயில்கள் அரிசனங்களுக்குத் திறந்துவிடப்பட்டன.

# கருத்து விருந்து பெற காஞ்சி வாரீர், தோழர்காள்!—21, 22

# நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 17—8—54 செவ்வாய்


# ஒற்றுமை கீதம்!

★

“பாரத தேசத்தின் பழம் பெருமையையும், அது இன்றிருக்கும் சீர்கேடான நிலைமையும் பாருங்கள்! மேற்கத்திய நாடுகளுக்கு அறிவு தானம் செய்த இந்த நாடு, இன்று இப்படி சீரழிந்து போய்விட்டதே! இந்த நிலைமாற, நாட்டு மக்களே ஒன்றுபடுங்கள்! நமது சர்க்கார் ஆரம்பித்திருக்கும் ஐந்தாண்டு திட்டத்திலே ஆர்வத்தோடு ஈடுபட்டு வேலை செய்யுங்கள். இதிலே கட்சி பேதங்கள் தேவையில்லை! எல்லா கட்சிகளும் ஒன்றுபட்டு, இந்திய இனம் ஒன்றே என்ற எண்ணத்துடன், பாரத சமுதாயம் நலம் பெற ஒற்றுமையுடன் உழையுங்கள்! இந்த சுதந்திர தினத்திலே மாற்றுக் கட்சி தோழர்களுக்கும், மற்றையோருக்கும் இதையே தான் நாம் திரும்பத் திரும்பக் கூறுகிறோம்!”

ஆகஸ்டு 15–சுதந்திர தின விழாவிலே, டெல்லியிலிருந்து, குமரிவரை பேசிய காங்கிரஸ் தலைவர்கள் ஆற்றிய அறிவுரையின் சாரம்தான் நாம் மேலே கொடுத்திருப்பது!

“பாரத நாட்டின் பழம் பெருமையைப் பாரீர்; அது இன்றிருக்கும் நிலைமையைக் காணீர்! ஆகவே, ஒற்றுமைபாக, கட்சிகளை மறந்து, பணி புரிந்திட வாரீர்!!”

என்ற ஒற்றுமை கீதம்தான் சுதந்திர தினத்தில் சென்ற இடமெல்லாம் கேட்டது!

மைசூரில் பேசிய பிரசாத்தும், டெல்லியில் கர்ஜித்த பண்டிதரும், சென்னையில் சிறிது நேரம் சிந்தனைத் துளிகளை சிந்திய காமராசரும் ஒற்றுமை கீதமே பாடியிருக்கின்றனர்!

சென்ற வாரத்தில், தஞ்சையிலே கூட சென்னை முதலமைச்சர் காமராஜர், “எல்லாக் கட்சிகளும் ஒற்றுமையுடன் பணியாற்றவேண்டும்!” என்று கூறினாராம்.

ஆனால் ‘ஒற்றுமை கீதம்’ பாடும் இந்த தேசீயத் தலைவர்கள் அத்தனை பேரும், இந்த நாட்டிலே ஏன் ஒற்றுமையில்லை; முன்பு இருந்ததா; அல்லது இனிதான் உண்டாக்க வேண்டுமா; அப்படி உண்டாக்கும் ஒற்றுமை எதற்கு தேவை;— என்ற பற்பல விஷயங்களைப் பற்றி விளக்கவே இல்லை!

திரும்பத் திரும்ப, “இந்தியா ஒன்று; அதில் வாழ்பவர் இந்தியர்; அவர்களுக்கு உழைக்க ஒற்றுமையாக பணி புரிந்திட வாரீர்!” என்றே பேசிக்கொண்டு சென்றிருக்கின்றனர்—மக்களை நோக்கி மாத்திரமல்ல; மாற்றுக் கட்சிகளையும் நோக்கி!

சுதந்திரம் பெற்று ஏழாண்டுகள் ஆண்ட பின்னும் உண்மைக்கு நெடுந்தூரத்திலேயே தேசியத் தோழர்கள் உலவுகின்றனர் என்பதைத்தான் அவர்கள் பேச்சு காண்பிக்கிறதே தவிர, கவலைக்குதவுவதாய் இல்லை!

பொதுவாக எல்லா தேசியத் தோழர்களும், “இந்திய இன மக்கள் ஒன்றாக வேண்டும்” என்று கருத்துரை புரிந்திருக்கிறார்கள். இந்தக் குறிக்கோளை அடைய அவர்கள் கூறும் மார்க்கம், “எல்லாக் கட்சிகளும் ஒன்றாக சேர்ந்து உழைக்கவேண்டும்!” என்பது!

இந்த இரண்டுமே உண்மைக்கு எவ்வளவு மாறானது என்பதை அதிகம் விளக்கத் தேவையில்லை.

இந்திய இன மக்கள் என்ற ஒரு திருக்கூட்டம், இந்திய உபகண்டத்திலே கிடையாது—என்பதை வரலாறு அறிந்தவர்கள் மறுக்க மாட்டார்கள். நமது தேசியத் தோழர்கள் புதிதாக சென்ற ஐம்பது அறுபது ஆண்டுகாலமாக கண்டுபிடித்திருக்கும் புதிய வார்த்தை அது!

இந்திய உபகண்டத்தில் இமயம் முதல் குமரி வரை, பஞ்சாபி, குஜராத்தி, வங்காளி, மார்வாரி, தெலுங்கன், தமிழன், மலையாளி, கன்னடியன் — இப்படியும் இன்னும், பல்வேறு மொழி பேசும் மக்களும், இந்து, முஸ்லீம் கிறிஸ்தவன், ஜைனன், பௌத்தன் என்றும் பல் வேறு மதமுடையோனும்தான் இருக்கின்றனரே தவிர, இந்திய இனத்தான் என்று ஒருவனும் கிடையாது!

இனம் என்று பார்க்கப் போனால், ஆராய்ச்சிப்படி, தென்னிந்தியாவில் திராவிட இனமும், வட இந்தியாவில் ஆரிய இனமும், அஸ்ஸாம், வங்காளம் முதலிய பகுதிகளில் மங்கோலிய இனமும்தான் பெருவாரியாக வாழ்கிறதாகத் தெரிகிறதே தவிர, ‘இந்திய இனம்’ என்ற ஒரு இனம் வாழ்கிறதாகத் தெரியவில்லை.

இனத்தால் ஒன்றுபடாத இந்த மக்கள், மதத்தாலும் வேறுபட்டு நிற்கின்றனர்!

ஒரே மதமானாலும், ஜாதிகளின் பிளவுபட்டு, கடைசியில், “நீங்க யாருங்க?” என்றால், “தொண்டை மண்டலம்!” என்று கூறுமளவு வெவ்வேறாகப் பிரிந்து நிற்கின்றனர்!

மொழியாலோ, சொல்லவே தேவையில்லை! தென்னிந்தியாவில் வழங்கும் திராவிடக்குழு மொழிகளுக்கும், வட இந்திய மொழிகளுக்கும் கொஞ்சம் கூட சம்பந்தம் கிடையாது!

இனத்தால், மதத்தால், மொழியால் முற்றிலும் வெவ்வேறான மக்கட்கூட்டம் இந்திய உபகண்டத்தில் வாழ்கிறது. முப்பத்து முக்கோடி மக்கள்; இங்கு சூழ்ந்திருக்கும் பேதமும் அந்தத் தொகை; ஆகையால் இங்கு எவரேலாரும் தனித் தனி!

எட்டு ஆண்டுகளுக்கு முன் இங்கு வந்து சென்ற பிரிட்டிஷ் எழுத்தாளன் பீவர்லி நிக்கோலஸ், “இந்தியா சென்றேன்; இந்தியனைக் காணவில்லை!” என்று எழுதியதை நாம் என்றும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும்.

இந்தியாவில் இந்தியன் என்றைக்கும் இருந்ததில்லை; ஏனென்றால், ‘இந்தியா’வே என்றுமிருந்ததில்லை!

ஐம்பத்தாறு தேசங்கள் என்று கூறுவது போல, பலப்பல ராஜ்யங்களாக கிடந்த இந்த உபகண்டத்தை ஆங்கிலேயன் பிடித்து, அவன் வசதிக்கு ஒரே எல்லைக் கோட்டைப் போட்டு இந்தியாவை உற்பத்தி செய்தான்!

அவனுடைய அடிமைத் தளையை அறுத்தெறிய, உரிமை வீரர்கள், நாட்டின் எல்லாப் பகுதியிலும் புறப்பட்டனர். பொது எதிரியை ஒழிக்க, ஊர் மக்கள் ஒன்று கூடுவது இயற்கை; அவசியமும் கூட!

ஆகஸ்டு 15, 1947—உடன் அந்தப் பிரச்னை தீர்ந்துவிட்டது! புலியை அடிக்கப் புறப்பட்ட ஊர்க்காரர்கள், திரும்ப, தங்கள் இல்லம் ஏகுவரே தவிர, கூடி சமைத்து உண்டு, சத்திர வாழ்க்கையை ஆரம்பித்தா விடுவார்கள்?

அதுபோல, சுயராஜ்ஜியம் கிடைத்தவுடன், இந்திய உபகண்டத்து மக்களிடையே, பொதுவான அரசியல் இயக்கம் தேவையில்லாததாகி விட்டது!

விடுதலை அடைந்த இந்தியாவில், அந்தந்த இன மக்கள், அவரவர்களுக்குப் பொதுவான பிரச்னையை கவனிக்க ஆரம்பித்து விட்டனர். அந்தந்த குழு மொழி பேசும் மக்கள் அந்தந்த மொழிகளுக்கு ஏற்றம் தேட ஆரம்பித்து விட்டனர். பொதுவாக வடவர் எண்ணங்களும், அபிலாஷைகளும், திராவிடர் நோக்கமும், குறிக்கோளும் வெவ்வேறாக ஆகிவிட்டன. விடுதலை பெறும் எந்த நாட்டிலும் இந்த விழிப்புணர்ச்சி நடைபெற்றேதான் தீரும்!

இதை உணர்ந்து கொண்டு, அதற்கு ஏற்றவிதமாக எல்லா வித இனங்களும் வெவ்வேறான மொழிவழி செல்லும் மக்களும் திருப்தியடைந்து ஒன்றுபடும்படியான முறையில் தேசியத் தோழர்கள் நடந்து கொண்டார்களா? அதுவும் கிடையாது. தேசிய சர்க்காரில், டெல்லியை ஆட்டிப்படைக்கும் அதிகாரம் படைத்த அத்தனை தேசியத் தோழனும், அவனவனுக்குச் சொந்தமான இன, மொழி, மதப் பண்புகளை காட்டவும், சந்தர்ப்பம் வரும்போது அதற்கு ஏற்றம் தேடவும் தயங்கியதே இல்லை!

வலுத்தவன், வாமம் சம்பாதிப்பது, உலக முறை!

டெல்லியில் அமர்ந்திருப்பவர்கள் வலுத்தவர்கள்; சென்னையிலிருப்பவர்கள் அவர்களின் தான்யணிய வேண்டியவர்கள்; அதன் நேரடிப் பலன், திராவிடம், வடவரின் வேட்டைக்காடாகிறது!

இதை எடுத்துக் கூறி,— நமது இனத்திற்கும், நாட்டிற்கும், மொழிக்கும் கடமை புரிந்திட நினைத்தால், நமது கட்சியையே மறந்துவிட்டு, ‘ஒன்றுபட்டு உழையுங்கள்’, என்று கூறுகின்றனர், காங்கிரஸ் தோழர்கள்!

ஒன்றுபட்டு உழைப்பது கூட வெறியில்லை; பிரச்னை அதனால் தீருமா?

அறுபதாண்டுகள் அரும்பாடு பட்டும், ஒரு மகாத்மாவை பலி கொடுத்தும், ஒரு மனித மாணிக்கத்தின் ஏழு ஆண்டு ஆட்சிக்கும் பிறகும், நிமிர்ந்து நிற்கும் இன, மொழி, மத வேறுபாடுகள், எல்லாக் கட்சிகளும் ஒன்று பட்டு உழைத்தால மாத்திரம் போய் விடுமா?

நேருவினுடைய கும்பமே வாலை மறக்க முடியவில்லை!

பிரசாத், பார்ப்பனன் காலைக் கழுவி குடிப்பதை கடமை எனக் கருதுகிறார்!

ஈட்ஜூவும், முன்ஷியும் இந்து அல்லாதவனை மனிதனாகவே மதிக்கமாட்டார்கள் போலவிருக்கிறது!

இந்நிலையில், காமராசரும், மற்ற தேசியத் தோழர்களும், இந்திய இனத்தை உற்பத்தி செய்யச் சொல்கின்றனர்; அதற்கு கட்சிகளைக் கலைத்து விட்டு ஒற்றுமையோடு பாடவேண்டுமென்று கூறுகின்றனர்!

உண்மையில், இந்திய உபகண்டத்து ஒற்றுமையில் இவர்களுக்கு நம்பிக்கை இருக்குமானால், அதை அடைய ‘இந்திய இனம்’ உற்பத்தி செய்வது வழியில்லை. இல்லாத ஒன்றை உற்பத்தி செய்ய முயற்சிப்பது, அதுவும் ஒரு இனத்தை உற்பத்தி செய்வது முடியாத காரியம்.

சுமார் முந்நூறு ஆண்டுகளுக்குப் பிறகும் ‘அமெரிக்க இனம்’ என்று, ஒன்று உற்பத்தியாகவில்லை என்பது ஞாபகமிருக்கட்டும்!

இந்திய உபகண்டத்தில் நீடித்த ஒற்றுமை நிலவ, பல்வேறு இன மொழிகளின் கலாசார, சமுதாயத் தொடர்புகளுக்கு ஏற்ற தனித்தனி குடியரசுகளை ஏற்படுத்தி, அந்தந்த குடியரசுகளும் தங்கள் தங்கள் இன மக்களின் நலனையும், மொழி வளர்ச்சியையும் கலாச்சார பாதுகாப்பையும் தேடிக்கொண்டு, அதற்குமேல் இந்திய உபகண்டத்து ஒற்றுமைக்கு பல நாடுகளும் சேர்ந்த கூட்டுறவு சபைகளை நிறுவிக்கொள்ளலாமே தவிர, இப்பொழுதிருக்கும் நிலையிலேயே, ‘ஒற்றுமை தேவை,’ என்று கூறுவது, உடம்பிலிருக்கும் கட்டியை ‘ஆபரேஷன்’ செய்யாமல், தடவிக்கொடுப்பது போன்றதாகும்!

உடலிலிருக்கும் கட்டியை தடவிக் கொடுப்பது, இதமாக இருக்கும்; ஆனால், உள்ளே சீழ்கொண்டு, புரையோடி உயிருக்கே ஆபத்தை மூட்டும்.

அதுபோல, விரைவில் நேரடியாக இந்த டெல்லி ஆதிபத்தியம் ஒழிக்கப்பட்டு, இன, மொழிவழி அரசுகள் அமைக்கப்படாவிட்டால், நாளடைவில் வளர்ந்துவரும் வெறுப்பு அதிகமாகி, பல நல்லமுறைகளுக்கு இந்திய உபகண்டத்தில் ஒற்றுமை நிலைக்க முடியாமல் செய்துவிடும்.

இதையெல்லாம் உணர்ந்து காரியமாற்றாது, ‘ஒற்றுமை வேண்டும்’ ‘ஒற்றுமை வேண்டும்,’ என்று பேசுவதிலும், அதற்கு அடித்த கட்டமாக கட்சிகளை மறந்து, கலைத்து, ‘பாரதத்தை புனரமைக்கும் பணியில் ஈடுபடுங்கள்,’ என்று கூறுவதிலும் எந்த அர்த்தமுமில்லை!

ஒரு கட்சியைக் கலைக்க இன்னொரு கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு உரிமையில்லை என்பது கூட அல்ல பிரச்னை; ஒரு கட்சி, அதன் குறிக்கோள்கள் நிறைவேறுவதைக் கண்டால், தானே கலைந்துவிடும் என்பது அரசியல் தெளிவான விஷயம்!

சுதந்திரத் தினத்தன்று ‘ஒற்றுமைக் கீதம்’ பாடிய தேசியத் தோழர்கள், இவைகளை யெல்லாம் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம்!

---

# பட்டமும் பதவியும்!

★

‘சர்’ பட்டமும், ‘பகதூர்’ பட்டங்களும் பெற்றிருப்பது தேசத் துரோகம்; பட்டம் வைத்திருப்பவர்கள், ‘பிரிட்டிஷ் அடிவருடிகள்’ என்று வசைமாரி பொழிந்து, பட்டம் துறந்தவர்களை சிரமேற் வைத்துக் கொண்டாடிய காலம், அந்தக் காலம்!

இப்போது காலம் தலைகீழாக மாறிவிட்டது!

பட்டத்தைத் துறக்க வேண்டுமென்றவர்களே பட்டங்களைத் தூக்கிக்கொண்டு எவரெவர் தமக்குத் தேவையோ அவர்கள் தலையில் சூட்ட ஓடுகின்றனர்!

இதே வேலையை முன்பு பிரிட்டிஷ்காரன் செய்து கொண்டிருந்தான்! இன்று வடவர் செய்கின்றனர்!

பத்மவிபூஷணமாம்; பாரத்ரதனமாம்! ஏதேதோ வாய்க்கு வராத இந்தியில உருவான பட்டங்கள், வெகு அவசர அவசரமாக நாட்டில் பலருக்கு இந்த சுதந்திர தினத்தன்று அளிக்கப்பட்டிருக்கிறது!

இதிலே ஒரு வேடிக்கை, சிலர் பட்டத்தைத் தேடி அலைவார்கள; சிலருக்கு பட்டமும் பதவியும் தேடிக கொண்டு வரும!

நமது சென்னை பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் ஏ. லட்சுமணசாமி முதலியாரும் விஞ்ஞானி சி. வி. ராமனும் பிரிட்டிஷ் ஆட்சியில் ‘சர்’ பட்டம் பெற்றவர்கள்!

“படித்தவர்களே, பட்டத்தை விடுங்கள்” என்று மகாத்மா கூறியபோதும், முடிசூடா மன்னர் போராட்டம் நடத்தியபோதும் இவர்கள், ‘சர்’ பட்டத்தை விட்டார்களில்லை!

இந்த அளவு துணிச்சலோடு, தேசிய இயக்கத்தை எதிர்த்து நின்றார்களே என்று அவர்களுக்கு விடுதலை படைத்த இந்தியாவில்குறைவு ஏதாவது நடந்துவிட்டதோ என்று எண்ணுகிறீர்கள்! மாறாக புதிய பட்டம் கிடைத்திருக்கிறது! சுதந்திர தினத்தன்று வெளியான அறிக்கைப்படி, லட்சுமணசாமி முதலியாரும், ராமனும் முறையே, ‘பத்மவிபூஷண்’, ‘பாரத் ரத்னா’ என்ற பட்டங்களை பெற்றிருக்கின்றனர்!

இதுவல்லவா தனிப்பட்ட மனிதனின் பெருமை!

பட்டமும் பதவியும் அவர்களைத் தேடிப்போகிறதே ஒழிய, அவர்கள், இருந்த இடத்திலேயே இருக்கின்றனர்!

# மக்கள் முன்னேற்றக் கட்சியின் மற்றொரு தலைவர் கைது!

—(:)—

## தடை செய்த புத்தகம் வைத்திருந்ததே காரணம்!

### கவர்னர் வெளியேற கட்டுக்காவல்!

### பிரிட்டிஷ் கயானாவில் வெள்ளையர் அமளி!

ஜார்ஜ்டவுன், ஆக. 16— பிரிட்டிஷ் கயானா மக்கள் முன்னேற்றக் கட்சியின் தலைவர்களுள் ஒருவரான டாக்டர் ஜே. பி. லட்சுமண் சிங் என்பவரை, கடந்த சில நாட்களுக்கு முன் கைது செய்து 3 மாத சிறைத் தண்டனை தந்துள்ளது, பிரிட்டிஷ் ஆதிக்கம்!

லட்சுமண சிங் தனது வீட்டில், அரசாங்கத்தால் தடை செய்யப்பட்ட புத்தகங்கள், குறிப்புகள் முதலிய வைத்திருந்தார் என்ற 'குற்றத்திற்காக'வே தண்டிக்கப்பட்டுள்ளாராம்!

அவர், அந்தக் காலனியில் உள்ள தொழிற்சங்கத் தலைவருமாவார்.

எனவே, 'பிரிட்டிஷ் கயானாவின் கவர்னரான ஆல்பிரைட் சாவேஜி தனது பாதுகாப்பைக் கருதி, காலனியிலுள்ள பதினான்கு சர்க்கரை ஆலைகள் எதற்கும் போகக்கூடாது; ஏனெனில் அங்குள்ள தொழிலாளர்கள் பலர் டாக்டர் லட்சுமண் சிங்கைத் தலைவராகக் கொண்டவர்கள்" என்று, பாதுகாப்புப் போலீசார் எச்சரித்துள்ளனராம்!

### 20,000 மைல் நீள சினிமா பார்த்தவர்!

உலகத்திலேயே அதிகமான சினிமாப் படங்களை உற்பத்தி செய்யும், அமெரிக்காவின், சென்சார் டைரக்டரான ஜோசப் ப்ரீன், விரைவில் தன் வேலையிலிருந்து ஓய்வு பெறுகிறார்.

1934-ம் ஆண்டிலிருந்து அமெரிக்க சென்சார் ஆபீசராக இருக்கும் ப்ரீன், இதுவரை 10,000 முழு நீளப் படங்களையும், அதற்கும் மேலான எண்ணிக்கையுள்ள செய்திப் படங்களையும் பார்த்து, சென்சார் செய்திருக்கிறாராம்.

பல ஆயிரக் கணக்கான படங்களை கத்தரித்துப் போட்ட ப்ரீனை, 'மிஸ்டர் கத்தரிக்கோல்' என்றே அழைப்பது வழக்கமாம்!

இதுவரை 'மிஸ்டர் கத்தரிக்கோல்' பார்த்த படங்களின் நீளம் 20,000 மைல்களுக்கு மேலாம்!

### புதுக் கொடியேற்றல்

சென்னை-21, வண்ணையம்பதி, தி. பெ. சாலை, 131-ம் எண் இல்லக் கொடி மரத்தில் (தியாகராயர் கல்லூரி சமீபம்) தோழர் தி. கு. வைரமன் உதவியாலும், இளந்தென்றல் முயற்சியாலும் தி.மு. கழகக் கொடி 9-8-54-ல் ஏற்றுவிக்கப்பட்டது.

### அனுதாபம்

5—8—54ல், சோழவந்தானில், பன்னீர் செல்வம் நிலையப் படிப்பக விளம்பர உறுப்பினர் தோழர் ச. இராசு இயற்கை எய்தியமை குறித்து 6 8 54ல், தி மு கழக செயற்குழு கூடி அன்னார் குடும்பத்தினருக்கு அனுதாபம் தெரிவித்துக்கொண்டது.

### எனது நன்றி

திரு-கொச்சியிலுள்ள 15 லட்சம் தமிழர்கள், தாயகத்தோடு சேர வேண்டுமென்ற கிளர்ச்சி குறித்து 30-7-54ல், நாகர்கோவிலில், தி. மு. க. பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள் கொடுத்த கட்டளைக்கிணங்க நாகர்கோவில் ஜில்லா கோர்ட் முன்பு காலை 11-மணி முதல் மாலை 5-மணி வரையில் அடையாள மறியலில் ஈடுபட்டு, வெற்றியும் பெற்றார்கள்.

போராட்ட சமயத்தில் அமைதியைக் கடைபிடித்து, அறப்போர் வீரர்களைப் பாராட்டி, தி. மு கழகத்திற்கு வெற்றியையும், நல்ல பெயரையும் வாங்கித் தந்த பொதுமக்களுக்கும், கட்சி பேதமின்றி அறப்போர் வீரர்களைக் கௌரவித்த தி. த. நா. காங்கிரசுக்கும், மற்ற கட்சிகளுக்கும், குறிப்பாக மாணவர்களுக்கும் எனது இதயம் கலந்த நன்றி.

கடமை யுணர்ந்து, அறப் போராட்டத்திற்கான ஆக்க வேலைகளில் ஈடுபட்டு பொருளுதவி மற்றும் இதர உதவிகளைத் தந்துதவிய, போராட்டம் வெற்றிகரமாக முடிய அரும்பாடுபட்டு வெற்றி தேடித்தந்த கழக தோழர்களுக்கும் எனது நன்றி.

வி. எம். ஜான்,
அறப்போராட்டத் தளபதி

# பார்மோசா விடுதலை: மக்கள் சீன ஆயத்தம்!

### சீனாவின் உள் நாட்டு விவகாரத்தில் அன்னியர் தலையீட்டை அனுமதியோம்

## ஆதிக்கபுரியினருக்கு - சௌ-என்-லாய் எச்சரிக்கை

"சீனாவினுடைய பிரதேச ஒற்றுமையையும், சுதந்திரத்தையும் தற்காத்துக்கொள்ள பார்மோசா விடுதலை செய்யப்பட வேண்டியது மிக அவசியமானதாகும்"

என்று சீனப் பிரதமர் சௌ-என்-லாய், சீன அரசாங்கத்தின் முன் வைத்துள்ள அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த புதனன்று, கூடை பெற்ற விரிவு படுத்தப்பட்ட அரசாங்கக் கவுன்சிலில் அந்த அறிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டதாகத் தெரிகிறது.

அந்தக் 'கவுன்சில்' கூட்டத்தில் சீனக் குடியரசுத் தலைவர் மாசே-துங், சீன இராணுவத் தளபதி சூ-டே ஆகியோரும், இன்னபிற தலைவர்களும் கலந்து கொண்டனர்.

அந்த அறிக்கையில் சௌ-என்-லாய் குறிப்பிட்டிருப்பதாவது:—

"அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்கள் முன்னைவிட அதிகமான அளவு இப்போது, சீனாவிலும், சீனக் கடற்கரை ஓரங்களிலும், மாபெரும் அழிவை உண்டு பண்ணும் யுத்தமொன்றைத் துவக்குவதற்காக, சியாங்கே-ஷேக்கைத் தூண்டி விட்டுக் கொண்டிருப்பதுடன் அவருக்கு பலவகை உதவிகளையும் செய்துகொண்டிருக்கிறார்கள்.

சமத்துவம், பிரதேச, சுதந்திரம் பாதுகாப்பு இவற்றின் அடிப்படையில் எந்த நாட்டுடனும் ராஜிய உறவு கொள்ள சீனா தயாராயிருக்கிறதென்பதை திரும்பத் திரும்ப நாம் சொல்லி வந்திருக்கிறோம். மேலும் சர்வதேச விவகாரங்களில் சமாதானத்திற்காகவும், மனித இனத்தின் முன்னேற்றத்திற்காகவும் பாடுபட்டு வந்திருக்கிறோம்.

இருப்பினும், அமெரிக்க ஆதிக்கக்காரர்கள், சியாங்கே-ஷேக் கும்பலின் பிற்போக்கு ஆட்சியை சீன மக்கள் தூக்கி எறிந்துவிட்டார்கள் என்ற உண்மையை உணர்ந்து கொள்ள இயலாதவர்களாய், 60 கோடி சீன மக்கள் மீது தொடர்ந்து பகைமை பாராட்டி வருவதுடன் அவர்களை இராணுவ தலையீட்டையும், யுத்த பயத்தையும்காட்டி மிரட்டுகிறார்கள்.

ஆசியாவிலும், உலக முழுவதிலும் அமைதி நிலவ வேண்டுமானால் அமெரிக்க ஆதிக்கக்காரர்களின், இத்தீய முறைகள் தகர்த்தெறியப்படவேண்டும்.

பார்மோசா, சந்தேகத்திற்கிடமின்றி சீனாவின் பிரதேசமாகும். அந்தப் பகுதியை அமெரிக்க ஆக்ரமிப்பாளர்கள் தங்கள் வசம் வைத்திருப்பதை சீன மக்கள் பொறுத்துக் கொள்ள முடியாது. மேலும் அந்தப் பகுதியை ஐ.நா. சபையின் பாதுகாப்பில் வைத்திருப்பதை அந்தஅளவு பொறுத்திருக்க முடியாததாகும்!

பார்மோசா விடுதலை என்பது சீனாவின் சுதந்திரத்தைப் பாதுகாத்துக்கொள்ளும் சீனாவின் உள்நாட்டு விஷயமாகும். இதில் வெளிநாட்டார் யாரும் தலையிடுவதை நாங்கள் பொறுத்துக்கொள்ள முடியாது. துரோகியான சியாங்கே-ஷேக் கும்பலுடன், அமெரிக்கா, பார்மோசா பற்றி ஏதேனும் உடன்பாடுகள் செய்திருந்தால் அது சட்டத்திற்குப் புறம்பானது! எந்த வித மதிப்பும் அற்றது!

எனவே, பார்மோசாவை விடுவிப்பதினின்று சீன மக்களை வெளிநாட்டு ஆக்கிரமிப்பாளர்கள் யாரேனும் தடுத்தால், எங்களுடைய பிரதேச ஒற்றுமைக்கும், சுதந்திரப் பாதுகாப்பிற்கும் ஊறு விளைவித்தால், அத்தகைய ஆக்ரமிப்பின் விளைவுகளைச் சந்திக்க அவர்கள் தங்களைத் தாங்களே தயார் செய்துகொள்ளவேண்டுமென எச்சரிக்கிறேன்!"

# காந்தியார் வாக்கு எங்கே?

—(:)—

### கவர்னருக்கு ஏன் இந்தக் கொள்ளைச் சம்பளம்!

## நாட்டு மக்கள் கேட்கின்றனர்!

### கண்ணியர்கள் தரும் கருத்துரை

ஐயா,

நான் ஒன்றுக்கு நாலணா கூட வருமானம் இல்லாமல் மக்கள் நாதியற்று இருக்கும் நேரத்தில், கவர்னர் பதவி வகிக்கும் ஒருவருக்கு மட்டும் ஆண்டொன்றுக்கு ஒன்பது லட்சத்து தொண்ணூற்றுமூன்றாயிரம் ரூபாய் எதற்காக? அன்று காந்தியார் வாக்களித்தார்—'சுதந்திர இந்தியாவில் 500 ரூபாய்க்குமேல் சம்பளம் கொடுக்கப்படமாட்டாது'—என்று! எங்கே அந்த வாக்கை ஆளவந்தார்கள் நிறைவேற்றினார்கள்?

இந்தியா ஏழ்மை நாடு என்று எவரும் கூறுகிறார்கள்; இந்த ஏழ்மை நாட்டில்தான் பெரிய அதிகாரிகளுக்கு அளவுக்கு மீறி கொள்ளையான சம்பளம்!

கவர்னர் சம்பளக் குறைப்புப் போராட்டத்தைக் குறைகூறுகிறவர்கள், அரசியல் சட்டத்தை ஆதாரம் காட்டி எதிர்ப்பு கிளப்புகிறார்கள். மக்கள் முன்னேற்றத்திற்குத் தடையாகவுள்ள சட்டங்கள்—அது அரசியல் சட்டமாயினும் சரி, ஆண்டவனே இட்ட சட்டமாயினும் சரி, அதை உடைத்தெறிய வேண்டுமேதவிர, சட்டத்தைக் காட்டி மக்கள் முன்னேற்றத்தைத் தடை செய்யக்கூடாது!

தி. தி. பாலு,
சென்னை-5

★

ஐயா,

"அரையாடை உடுத்தி அறப்போர் செய்த அண்ணல் வழி வந்த அரசினர் காட்டினர் ஆடம்பர அலங்காரம், அந்தத் தக்கு ஆயிரம் ஆயிரம் ரூபாய் சம்பளமும் கவர்னருக்கு?"

"எச்சில் தொட்டியிலே 'இலை—இலை' என்று ஏங்கித் தவித்து, மோப்பம் பிடித்த நாய்களோடு சண்டையிட்டு, பிச்சைப் புண்ணைத் அடிஅடிப்போர் நாளுக்கு நாள் பல்கி வரும் இந்த நாளிலே, ஒரே ஒரு மனிதருக்கா ஆயிரம் ஆயிரம் அள்ளித் குவிப்பது?"

வி. எஸ். இராமசாமி,
சேலம்.

★

ஐயா,

நாடு இருக்கும் நிலையில் கவர்னருக்கு வருடத்துக்கு 10 லட்ச ரூபாய் கொடுப்பது தண்டம்தான்! கவர்னர் பதவியே இல்லை கவர்னர் இதுவரையில் சாதித்தது, சாதிக்கப் போவது ஒன்றுமில்லை. இந்தப் பணத்தைக் கொண்டு ஆஸ்பத்திரிகள் கட்டலாம்; ஏழை குழந்தைகளுக்கு இலவசமாகக் கல்வி கற்பிக்கலாம்; தொழிற்சாலைகள் ஏற்படுத்தலாம்; இன்னும் பலவித நன்மைகள் செய்யலாம். தனி ஒரு மனிதனுக்கு இவ்வளவு பணத்தைக் கொட்டிக் கொடுப்பது நம் நாட்டின் பொருளாதார நிலைக்கு ஏற்றதல்ல! இதற்குப் போராட்டம் நிச்சயம் நடக்க வேண்டும். உண்மைக்கு எப்பொழுதும் வெற்றி நிச்சயம் உண்டு. கவர்னர் சம்பளத்தை நினைத்தால் நெஞ்சம் திடுக்கிடச் செய்கிறது.

ஏ. வி. மோகன்,
திருவல்லிக்கேணி.

ஐயா,

கவர்னருக்கு மக்களின் வரிப் பணத்திலிருந்து ஆண்டு ஒன்றுக்கு பத்து லட்சம் ரூபாய் அள்ளிக் கொடுப்பதை இனியும் நாம் சகித்துக்கொண்டிருக்க முடியாது. இதை எதிர்த்துப் போராட தி. மு. கழகம் முன் வருவதை வரவேற்கிறோம்; வாழ்த்துகிறோம்; முழு மூச்சாக ஆதரிக்கிறோம்.

13 தோழர்கள்,
பொள்ளாச்சி.

ஐயா,

நம் நாடு, வறுமையால் வாடுகின்ற ஏழை நாடு! குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் தமிழகத்தில் நிலவும் வறுமைக்குச் சொல்ல வேண்டியதே இல்லை! ஏற்கனவே நம் நாடு, 6 ஆண்டுகளாகப் பொருளாதாரத்தில் பற்றாக்குறையாக இருக்கிறது.

50 ரூபாய்க்குக் கீழும், 500 ரூபாய்க்கு மேலும் யாருக்கும் சுதந்திர இந்தியாவில் இருக்காது என்று சொல்லிவிட்டுப் போன மகாத்மா காந்தியின் வார்த்தைகளை காற்றிலே பறக்க விட்டு விட்டார்கள், இந்தத் தேசிய அகிம்சாமூர்த்திகள்!

பொதுமக்களின் வரிப்பணத்தில் சுமார் 10 லட்சம் ரூபாயை தனியொரு மனிதருக்குக் கொடுப்பதென்றால், மனித உள்ளம் படைத்த எவருக்குமே மனதில் கலக்கம் தோன்றுவதல்லாமல், அரசாட்சியின்மீதும் அவநம்பிக்கை ஏற்பட்டு ஒரு கிளர்ச்சியையும் உண்டுபண்ணத்தான் செய்யும்! ஆகையால், கவர்னர் அவர்கள் தாமாகவே சம்பளத்தைக் குறைத்துக் கொள்வது, கண்ணியமானது.

கோ. வேங்கடசாமி,
அத்திப்பாளையம்.

★

ஐயா,

ஆயிரக்கணக்கான நெசவாளர்கள் சென்னை வீதிகளிலே கஞ்சி, கஞ்சி என்று கதறிக் கொண்டிருந்த காட்சியை இம்மாநில கவர்னர் நேரிலே கண்டும், தன் கரத்திலே குவியும் ரூபாய் பத்து லட்சத்திலே சிறிதளவும் தந்துதவ முன்வராத மாற்றுத்தாய் மனப்பான்மையை எதிர்க்கவும், ஏழை மக்களின் உழைப்பின் பயனை ஒன்று திரட்டி அவருக்களிக்கும் அநியாயமதை அனைவர்க்கும் காட்டவும் கவர்னரின் சம்பளக் குறைப்புப் போராட்டம் அவசியம் தேவை.

என். தொண்டிற்காக,
திண்டுக்கல்.

★

ஐயா,

ஏழை பங்காளர்கள் என்று கூறுபவர்களின் ஆட்சியில், தேவையில்லாத—மக்கள் விரும்பாத கவர்னர் பதவியில் இருப்பவர்களுக்கு சம்பளம், விருந்து வேடிக்கை என்ற பெயரால் பல இலட்சக் கணக்கான ரூபாய்களை வரிப் பணத்திலிருந்து அள்ளிக் கொடுக்கப்படுகிறது; கவர்னரின் சம்பளத்தைக் குறைக்க உடனடியாக மிகப் பெரிய போராட்டம் தேவை.

பி. என். இராமானுஜம்,
பொள்ளாச்சி.

★

ஐயா,

மத்திய தரக் குடும்பம் முதல் சாலை யோரத்திலே சாகும் ஆண்டி வரை சராசரி தினசரி வருமானம் ஒரு ரூபாய்க்கும் குறைவு இந்த நாட்டில்தான்; ஆனால், சென்னை கவர்னர் குடியிருக்கும் உல்லாச மாளிகைக்கு அழகு செய்யும் பூந்தோட்டத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 66,000 செலவு; இதுதான் ஏழை இந்தியாவா? நீதியும் நேர்மையும் இதுவா? இந்த நாட்டு மக்கள் வாழவேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள் இதை சகித்துக்கொள்ள வேண்டுமோ? மாகாண அரசுக்கு பற்றுக் குறையில் உள்ள நேரத்திலும் தினசரி ஒரு மனிதனுக்கு ரூ. 3,000 செலவு செய்வதை நிச்சயம் போராடிக் குறைக்க ஆவன செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.

எஸ். ஈ. ஏ. காதிர்,
சேலம்.

# வெற்றிலைக் கொடிக்கால்

## சர்க்காரிடம் தூதுக் குழு கோரிக்கை

சென்னை, ஆக. 17—

கடந்த நான்கு ஆண்டுகளாக ஒருவித தொத்து நோயால் நாமக்கல் வட்ட பொத்தனூர், வேலூர் பகுதி, கரூர், புகளூர் வட்டாரங்களிலுள்ள வெற்றிலைக் கொடிக்கால் மிகவும் பாதிக்கப்பட்டு ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் தொழிலாளர்கள் படும் அவதி பற்றி அரசாங்கத்திற்கு எடுத்துக்கூற, பொத்தனூர் வெற்றிலைத் தொழிலாளர் சங்க சார்பில் தூதுக்குழு ஒன்று 11-8-54 புதனன்று முதலமைச்சர் காமராசரை சந்தித்தது.

திராவிட சட்ட சபைக் கட்சி செயலாளர் தோழர் எம். பி. சுப்பிரமணியம் எம். எல். ஏ., தலைமையில் சென்ற அந்தத் தூதுக் குழுவில் வெற்றிலைத் தொழிலாளர் சங்க அமைப்பாளர் தோழர் இரா. சண்முகம், தோழர் இரா சகாதன், சட்ட சபை உறுப்பினர்கள் தோழர்கள் ஏ. கோவிந்தசாமி, டி. எம். காளியண்ணன், வாளையம்புதூர் கந்தசாமி அரவக்குறிச்சி இரத்தினம். இராமசாமி, அர்த்தநாரி, பாராளுமன்ற உறுப்பினர் எஸ். கே. பேபி ஆகியோர் கலந்துகொண்டனர்.

வெற்றிலை மாதிரிப் பண்ணை அப்பகுதியில் அமைக்க வேண்டிய அவசியத்தையும், தக்க பூச்சி கொல்லி மருந்து காணவேண்டுமெனவும், இலவச மருந்து குடியானவர்களுக்கு வழங்க வேண்டுமெனவும், வெற்றிலைக்கு விதிக்கப்பட்டுள்ள விற்பனை வரி ஒழிக்கப்பட வேண்டிய அவசியத்தையும் விளக்கிக் கூறினர்.

முதலமைச்சர் காமராசர் பதிலளிக்கையில், சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும், வெற்றிலை விவசாயிகளையும் அழைத்து ஒரு கூட்டம் கூட்டி, தக்க பரிகாரம் தேடுவதாக வாக்களித்தார்.

★

### பொத்தனூரில் உயர்நிலைப் பள்ளி திறக்க......

தி. மு. கழகக் கோரிக்கை

பொத்தனூரில் ஒரு உயர்நிலைப் பள்ளி திறக்கப்பட வேண்டுமென்று கூறும் மகஜர் ஒன்று; முதலமைச்சர் காமராசரிடம் பொத்தனூர் தி. மு. கழகத் தோழர்களால் கொடுக்கப்பட்டது. முதலமைச்சர், ஆவன செய்வதாகக் கூறினார்.


★

தோழர் எம். பி. சுப்பிரமணியம், எம். எல். ஏ., தலைமையில், தோழர்கள் டி. எம். காளியண்ணன், இரா. சகாதன் இரா. சண்முகம் ஆகியோர் பொத்தனூர் வெற்றிலைத் தொழிலாளர் சங்க சார்பில், அமைச்சர்கள் மாணிக்கவேலர், பக்தவத்சலம் ஆகியவர்களை, அவர்களுடைய இல்லங்களில் 14—8—54-ல், சந்தித்து மகஜர்களை சமர்ப்பித்தனர்.

விவசாய அமைச்சர் மாணிக்கவேலர், வெற்றிலையும் அமுதச் சரக்குகளோடு சேர்ந்ததாதலால், அதன் மேல் விதிக்கப்பட்டுள்ள விற்பனை வரியை ஒழித்துவிடுவது பற்றி அரசாங்கம் ஆலோசித்து வருகிறது. விரைவில் நல்ல முடிவு ஏற்படலாம்," என்று கூறினார்.

விவசாய அமைச்சர் தோழர் பக்தவத்சலம் பதில் கூறுகையில், "வெற்றிலைக் கேற்பட்டுள்ள வியாதி இன்னது என்று அரசாங்கத்தால் இன்னமும் சரியாகக் கண்டறியமுடியவில்லை; இவ்வியாதியைப் போக்க இந்திய விவசாய ஆராய்ச்சிக் கழகத்திற்கு பாதிக்கப்பட்டுள்ள வெற்றிலைக் கொடியை அனுப்பி தக்க பரிகாரம் விரைவில் தேடுவோம்," என்றார்.

இலவசமாக பூச்சி கொல்லி மருந்துகளை வெற்றிலை பயிரிடுவோருக்கு வழங்க வேண்டுமெனக் கோரியதற்கு, "வரும் செப்டம்பரில், பாதிக்கப்பட்டுள்ள பொத்தனூர், வேலூர் பகுதிக்கு வந்து வெற்றிலைக் கொடிக்கால்களை பார்வையிட்டு ஆவன செய்கிறேன்," என்றார்.



பாதிக்கப்பட்ட வெற்றிலை கொடிக்கால் பகுதிகளை, தோழர்கள் ஜி. பி. சோமசுந்தரம், எம். பி. சுப்பிரமணியம், பொன்னுரங்கசாமி, இரா. ஜெகநாதன், இரா. சண்முகம், வேலூர் ராமனுதன், ஈ. ஆர். கிருஷ்ணன் ஆகியோர் பார்வையிட்டனர்.

---

### செங்கற்பட்டு மாவட்ட தி. மு. கழகத் தோழர்களுக்கு

★

21, 22—8—54 தேதிகளில் காஞ்சீபுரத்தில் நடைபெறும் இரண்டு நாள் மாநாடுகளுக்கும், தீர்மானங்கள் அனுப்ப விரும்பும் தோழர்கள், 20—8—54-க்குள் கிடைக்கும்படி அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறேன்.

—சி. வி. எம். அண்ணாமலை,
வரவேற்புக் குழு தலைவர்.

---

### திரு—கொச்சி அமைச்சருக்கு...

கருப்புக் கொடி காட்ட தி. மு. கழக தோழர்கள் முயற்சி

திரு—கொச்சி நிதி அமைச்சர் பி. எஸ். நடராச பிள்ளை திண்டுக்கல்லில் கடைபெற்ற பி-சோ. கட்சி மாநாட்டிற்குச் செல்கிறார் என்பதை அறிந்து, மதுரை ரயில் நிலையத்தில் திரு—கொச்சியில் தமிழர்களை அடக்குமுறைக்கு உள்ளாக்கும் கொடுமைக்கு தங்கள் எதிர்ப்பைத் தெரிவிக்கும் முறையில் அவருக்கு கருப்புக் கொடி காட்ட மதுரை நகர தி. மு. கழகத்தினர் ஆயிரக்கணக்கில் கருப்புக்கொடிகளுடன் 14-ம் தேதி மாலை மதுரை ரயில் நிலையத்தில் கூடி நின்றனர். என்காரணத்தாலோ அமைச்சர் நடராச பிள்ளை வரவில்லை என்று தெரிகிறது.

### தேசியத் திட்டக் கடன்:

ஜூலை வரை ரூ. 125 கோடி மட்டும் வசூல்!

அடுத்த மாதத்துடன் கடன் பெறும் காலம் முடியுமாம்!

புதுடில்லி, ஆக. 16—

"இந்தியா முழுவதும் எழுப்பப்பட்ட தேசிய திட்டக் கடனுக்கு வருகிற செப்டம்பர் 16-ம் தேதி வரைதான் முதலீடு செய்ய முடியும்; அத்துடன் மேலும் கடன்கள் பெற்றுக்கொள்ளப் படமாட்டாது," என்று இந்திய அரசாங்க அறிக்கை ஒன்று கூறுகிறது.

வருடத்திற்கு $3\frac{1}{2}$ சதவிகிதம் வட்டி கிடைக்கும் அந்தக் கடனுக்கு தாராளமாகத் தரும்படி நிதி அமைச்சர் சிந்தாமண் தேஷ்முக் நாட்டு மக்களை வானொலி மூலம் வேண்டியுள்ளார்.

கடந்த வருடம் 19-ம் தேதி பன்று அந்தபத்து ஆண்டு தேசிய திட்டக் கடன் எழுப்பப்பட்டது. கடந்த மே மாதம் விநியோகிக்க ஆரம்பிக்கப்பட்ட தேசிய திட்ட பத்திரங்கள் தொடர்ந்து கிடைக்கும் என்றும் அறிவிக்கப்படுகிறது.

தேசிய திட்டக் கடனுக்கு இதுவரை சர்க்காரிடமுள்ள புள்ளி விவரப்படி ஜூலை முடிய ரூ 125 கோடி சேர்ந்துள்ளதாம்.

தேசிய திட்ட பத்திரங்களை கடனாகவோ உரிமையாகவோ விநியோகிக்கப்பட்டதில் ரூ 15 கோடி கிடைத்துள்ளதாம்.

### பிரசாரப் பயிற்சிக் கூட்டம்

18—8—54 புதன் மாலை 6 மணிக்கு, சென்னை-21, 5-வது வட்ட தி மு கழகச் சார்பில், கழக இல்லத்தில், தோழர் டபிள்யூ எஸ் சிவசாமி தலைமையில், சொற் பயிற்சிக் கூட்டம் நடைபெறும். "நட்பும் பகைமையும்" என்னும் தலைப்பில், தோழர்கள் கே. கலைசெல்வி, எஸ். ஆர். நாதன், இ இராசேந்திரன், சி வி. கே வேலன் ஆகியோர் பேசுவர்.

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் தோழர் இரா நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்கள், அடுத்த மாதத்தில் ... [illegible]

---

### பட்டமளிக்கிறார்கள் 'பாதுஷா'க்கள்!

'பாரத் ரத்னா'—'பத்ம விபூஷன்' பகட்டான பட்டங்கள்!

ஆச்சாரியாரின் ஆலாபனைக்கு சன்மானம்!

புதுடில்லி, ஆக. 14—

டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன், சி. வி. ராமன், சி. ஆர். ஆகியோருக்கு "பாரத் ரத்னா" என்ற பட்டத்தை குடியரசுத் தலைவர் வழங்கியுள்ளார்.

கலை, இலக்கியம், விஞ்ஞானம் ஆகிய துறைகளின் முன்னேற்றத்திற்கும், மிக உயர்ந்த பொது சேவைக்கு மதிப்பளிக்கும் வகையிலுமாக இந்தப் பட்டமளிப்பு என் தரப்படுகின்றனவாம்.

"பத்ம விபூஷன்" என்ற ஒரு பட்டத்தையும், பி ஜி கேர், வி. கே. கிருஷ்ண மேனன், நந்தலால்போஸ், டாக்டர் சத்ய நாராயண சாந்தி போஸ், டாக்டர் ஜாகிர் உசேன் முதலியோருக்கு வழங்கவும் செய்திருக்கிறார்கள்.

இந்த 'பத்ம விபூஷன்' பட்டம்; இன்னும், கவி வள்ளத்தோள், ஜமினிராய், எம். எஸ் சுப்புலட்சுமி ஆகியோருக்கும் தரப்பட்டுள்ளது.

'பத்ம விபூஷன்' பட்டத்தில் மூன்று வகை உண்டாம்.

இதில் முதல்வகை 'பத்ம விபூஷன்' பட்டம் பெற்றுள்ள பத்தொன்பது பேரில் டாக்டர் ஏ. லட்சுமணசுவாமியும் ஒருவராவார்.

இந்த விவரங்கள் இந்திய சர்க்கார் அதிகார இதழ்களில் வெளியிட்டுள்ள ஒரு விசேட கெஜட்டில் காணப்படுகின்றன.

---

# காஞ்சி வாரீர்!

★

ஆகஸ்டு 21, 22-ந் தேதிகள், செங்கற்பட்டு மாவட்டத்தின் சிறப்பு நாட்கள்!

தென்னகத்தின் வீரக் காளைகள் வெற்றி முரசு கொட்டி, சிங்காரச் சிந்துபாடப் போகிறார்கள்! இரண்டாண்டு காலத்தில் தாங்கள் சாதித்த அரும்பெரும் காரியங்களை விளக்கி, மக்களின் முன்பு வைக்கப்போகிறார்கள்!!

திபாகத்தின் ஜோதிகள், பயமறியாச் சிங்கங்கள், பவனி வந்த காலம் ஒன்று இருந்தது தென்னாட்டில்! அந்தப் பொற்காலம், புழுதிக்குள் மறைந்தது—சேரனும், சோழனும், பாண்டியனும் மகிழ்ந்துலவிய தங்கத் தரணி வீழ்ந்தது! கோபுரம் குப்பைமேடாயிற்று! வஞ்சகர் வாழ்ந்தனர்! நம் நாடு நஞ்சைகளின் கூடாரமாயிற்று! குடிசைகளிலே குமுறல்! வீதிகளிலே பிணம்! விழியிலே அனல்! வயிற்றிலே அனல்! ஐயகோ......சோலைவனம் பாலைவனமாயிற்று. அந்தச் சோகம் போக்க, துள்ளி எழுந்ததே.........சுயமரியாதை இயக்கம்!

அதன் தூய கொள்கைகள் நாட்டின் நாலு பக்கங்களிலும் முரசொலிக்கின்றன. இசை, எழுத்திலே புதுமை! ஏட்டிலே முரசொலி! எண்ணத்திலே புரட்சி! நாடகம், மேடை, திரை—எங்கும் இன்று அறிவொலி கேட்கிறோம்.

திரையுலகில் ஒளிவீசி முழங்கிய கலைவாணர் என். எஸ் கிருஷ்ணன் அவர்கள் தலைமையிலே, 21—8—54 அன்று சமூக சீர்திருத்த மாநாடு.

மாநாட்டைத் துவக்கி வைப்பவர் புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள்.

★

கண்ணியத்தால் வளரும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் அருமணியினை அறிவீர்கள் நீங்கள். அதன் இரண்டாவது மாவட்ட மாநாடு இப்போது!

22—8—54 அன்று நடைபெறும் அரசியல் மாநாட்டிற்கு தூத்துக்குடி செயல் வீரர் தோழர் இரா. சு. தங்கப்பழம் அவர்கள் தலைமை வகிக்கிறார்.

திருச்சி நகர செயலாளர் சேலையின் சின்னமாம் தோழர் எம் எஸ். மணி மாநாட்டைத் துவக்கி வைக்கிறார்.

தாயவர்களின் கோட்டமாம், அறிவொளிச் சோலையாம், தி. மு. கழகம்—தாயகத்துத் தோழர்காள்! வாலிப வீரர்காள்!! உங்களையெல்லாம் இரு கைகூப்பி அழைக்கிறது......

★

அந்த இரண்டு நாட்களிலும் கழகத்தின் முன்னணி வீரர்கள் அனைவரும், புத்தம் புதிய கருத்துக்களை சித்தம் களிக்க அளிக்கப் போகிறார்கள்! பொதுச் செயலாளர் அண்ணாவும், ஏனையோரும் தி. மு. கழகத்தின் எதிர்காலம் பற்றிய எண்ணங்களை எடுத்தியம்பப் போகிறார்கள்!

★

அந்த இரண்டு நாட்களிலும், நடிகமணிகள் எஸ். எஸ். ராஜேந்திரன், டி. வி. நாராயணசாமி முதலியோர் நடிக்கும், 'சந்திரமோகன்'—'அம்மையப்பன்' ஆகிய இரு அரிய கலை விருந்துகளையும் காணலாம்!

★

நாடு, முக்கியமான கட்டத்திலிருக்கிறது; திரு—கோச்சியில் உரிமைப் போர்! புதுவையிலே, புது மலர்ச்சி! இந்த நேரத்திலே கூடும், செங்கற்பட்டு மாவட்ட மாநாடுகளுக்கு வாரீர்! வாரீர்!! வாரீர்!!!

—வரவேற்புக் குழுவினர்.

# களம் பல கண்ட காளைகளே! காஞ்சிக்குப் புறப்படுவீர்!